SE – 034

**I Semester B.A./B.Sc./B.C.A./B.Sc.(FAD)/B.P.A./B.V.A./B.S.W. Degree Examination, January 2025**
**(SEP 2024-25)**
**TAMIL LANGUAGE (Paper – I, Part – I)**

Time : 3 Hours Max. Marks : 80

LIBRARY
Acc. No. ..............
Date ..............

SECTION – A

I. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. **(3×8=24)**

1) ஆயர்குல மகளின் நற்சொல் கேட்டலும், தலைவியை ஆற்றுவித்தலும் குறித்து முல்லைப்பாட்டு பாடலின் வழி விளக்குக.

2) பாசறையின் நிகழ்வுகளை குறித்து நப்பூதனார் கூறிய கருத்துக்களை எழுதுக.

3) தாளாண்மை பற்றி நாலடியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

4) நல்லந்துவனார் பாடிய நெய்தல் கலி பாடலின் கருத்துக்களை கூறுக ?

5) செவிலித்தாய்க்கு அந்தணர்கள் கூறிய அறிவுரைகளை கலித்தொகை பாடலின் வழிநின்று விளக்குக.

II. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×4=20)**

1) வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்

2) அருங்கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட நறுவீ முல்லை ....

3) இன் உயிர் தருதலும் ஆற்றுமோ,
முன்னிய தேஎத்து முயற்று செய் பொருளே!

4) பொய்கைப் பூப் புதிது உண்ட வரிவண்டுகழிப் பூத்த

5) கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்

6) பொழுது அளந்து அறியும், பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர், தோன்ற வாழ்த்தி ...

P.T.O.

## SECTION – B

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. **(4×4=16)**

1) போலியின் வகைகளை எடுத்துக்காட்டுடன் கூறுக.

2) சொல்லிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.

3) குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.

4) சார்பெழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

5) மெய்யெழுத்துக்கள் என்றால் என்ன ? அவை யாவை ?

6) ஆய்தக்குறுக்கம் சான்றுடன் விளக்குக.

## SECTION – C

IV. ''கீதாரி'' என்னும் நாவலில் இருந்து பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விரிவான விடை தருக. **(2×10=20)**

1) வெள்ளைச்சாமியின் பாத்திரப் படைப்பு.

2) ஆடு மேய்ப்பவர்களின் அவலநிலை.

3) ராமு கீதாரியின் வாழ்க்கை குறிப்புகள்.

4) முத்தம்மாளின் பாத்திரப் படைப்பு.

---